திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: பதநீரிலிருந்து தயார் செய்யப்படுகின்ற சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்களுக்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? இதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பதநீரிலிருந்து உற்பத்தி செய்த சர்க்கரையை மார்க்கெட்டில் விற்க முடியாத ஒரே காரணத்தினால் இதை என்ன செய்வது என்று சொல்லி, இருந்த 25 டன் சர்க்கரையை சாக்லட் ஆகவும், பழ ரசம், பாம் கோலா என்ற பானமாகவும் தயார் செய்து இங்குள்ள காதி விற்பனை நிலையத்தில் வைத்து அவைகளை விற்றார்கள். இப்பொழுது அந்த ஜீனி குறைந்து விட்டது. மேலும் இப்பொழுது பதநீர் இறக்குவதற்கும் செலவு அதிகமாக ஆகிறது. காரணம், பதநீர் இறக்குகின்ற தொழிலாளிகளுக்கு முன்பு கூலி ரூ. 3.50 ஆக இருந்தது, இப்பொழுது மது விலக்கை ஒத்திவைத்த பிறகு ரூ. 7 ஆக உயர்ந்துவிட்ட காரணத்தினால், அந்த அளவுக்குப் பதநீர் சர்க்கரை உற்பத்தி செய்வது என்றால் கூட, அதனுடைய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகின்ற காரணத்தினால், உள்ளூர் மார்க்கெட்டிலேயே விற்பது கடினமாக இருக்கும். வெளி மார்க்கெட் ஏற்படுகின்ற அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமா என்ற யோசனையும் இருக்கிறது. இப்பொழுது சர்க்கரை இல்லாத காரணத்தினால் கூட இது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

Taking over of Temples

* 209. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any financial limit has been prescribed for taking over temples by the Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: வரையறுக்கப்பட்ட நிதிநிலை இருந்தும் சில ஆலயங்கள் இத்துறையினரால் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அறநிலையத் துறையில் கோவில்களைச் சேர்த்துக்கொள்வற்கு வருமானத்தை வரையறுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை, அரசாங்கத்தின் ஒரு கொள்கை யாக வைத்திருக்கிறோம். ரூ. 200-க்கு மேல் வருமானம் வருகிற கோவில்களை தற்பொழுது அரசின் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்வது என்ற நிலைமையில் நாம் இப்பொழுது சேர்த்துக் கொண் டிருக்கிறோம். ஏதாவது கோவில்கள் விடப்பட்டிருந்தால், அவை களைச் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேல் வரு மானம் வரக்கூடிய கோயில்களின் நிர்வாகத்தை அரசாங்கமே எடுத்துக் கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி யானால் அதற்குக் குறைந்த வருமானம் வரக்கூடிய கோயில்களில் இருக்கும் ஆண்டவனுக்கு சக்தி இல்லையா? சக்தி அதிகமாக இருக்கும் ஆண்டவன் இருக்கின்ற கோயில்களுக்குத்தான் மக்கள் போகிறார்களா? அப்படியானால் வருமானம் இல்லாமல் இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடிவிடுவதுபோல், சக்தி இல்லாமல், அதனால் வருமானம் குறைவாகக் கிடைக்கக்கூடிய கோயில்களையும் மூடிவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இப்போது 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்ற கொள்கை இருக்கிறது. அதற்காக மற்ற கோயில்களை மூடிவிட வேண்டும் என்பது சரியல்ல. வருமானம் குறைவாக வரக்கூடியக் கோயில்களுக்கு, வருமானத்தைப் பெருக்கு வதற்கு வேண்டுமானால் நண்பர் துரைமுருகன் சென்று வரலாம்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேல் வரு மானம் வரக்கூடிய கோயில்களில் நிர்வாகத்தை அறநிலையத்துறை ஏற்றுக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லாமல் எந்தெந்த கோயில்களுக்கு நியாயமான பாதுகாப்பு கொடுக்க வேண்டும், மக்கள் அதிகமாக சென்று வருவதற்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று பார்த்து, கோயில்களின் வருமானத்தைப் பெருக்க அறநிலையத்துறை முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எல்லாக் கோயில்களையும் நம்முடைய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்

கீழ் கொண்டுவர வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் முதல் கட்டமாக 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வருமானத்தை மட்டும் வைத்து கோயில் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் சரியல்ல. கோயில்களின் தன்மை, எப்போது கட்டப்பட்டது, சரித்திர முக்கியத்துவம் இவைகளையும் கருத்திற்கொண்டு அந்தக் கோயில்கள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, படிப்படியாக எல்லாக் கோயில்களையும் எடுத்துக்கொள்வதுதான் அறநிலையத் துறையின் நோக்கமாக இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இன்னும் பல கோயில்களில் வட மொழியில்தான் அர்ச்சனை நடைபெறுகிறது. அதை தடை செய்து, எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக மாயூரத்தில் சில கோயில்களில் உண்டி மூலமாக வாரந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அதற்குச் சரியான கணக்கு வைக்கப்படவில்லை. அங்கே இருப்பவர்கள் அதைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோயில்களுக்கு எல்லாம் "எக்சிகியூட்டிவ் ஆபீசர்களைப்" போட்டு கணக்குகளைச் சரியாக வைத்து நிர்வகிக்க வேண்டுமென்று கும்பகோணத்தில் இருக்கின்ற அசிஸ்டன்ட் கமிஷனருக்கு பலமுறை எடுத்துச் சொல்லியும் இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அந்தக் கோயில்களுக்கு உடனடியாக எக்சிகியூட்டிவ் ஆபீசர்களைப் போட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எல்லாக் கோயில்களையும் அரசாங்கமே நிர்வகிக்க வேண்டுமென்ற பொதுவான ஒரு எண்ணம் இருக்கிறது. சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற நிர்வாக அதிகாரிகளின் மாநாட்டில் கூட எல்லாக் கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளைப் போட வேண்டுமென்ற இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது எந்த அளவுக்கு விரைவில் முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்தப்படும்.

1972 டிசம்பர் 15]

அப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையும் கருத்திற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, வருமானம் குறைந்த கோயில்களின் வருமானத்தைப் பெருக்க, அந்தந்த கோயில் நிர்வாகத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சில கோயில்களில் வருமானம் இல்லை; பிற்படுத்தப்பட்ட கோயில் என்று சொல்லிக் கொண்டு, வரக்கூடிய வருமானத்தை எல்லாம் அங்கிருப்பவர்களே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட கோயில்களில் கணக்குகள் சரியாக வைக்கப்படுகின்றதா, எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை அறிய ஒரு சி.ஐ.டி.யை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இந்தத் தகவல் தெரிந்திருப்பதால், எந்த எந்தக் கோயில்களில் வருமானம் சரியாகக் காட்டப்படாமல் கையாளப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரானால் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, அறநிலையத் துறையின் கீழ் வராத கோயில்களையும் இந்தத்துறையில் கொண்டு வருவதற்கு, குறிப்பாக கோவை மாவட்டத்திலுள்ள சில குறிப்பிட்ட கோயில்களைக் கொண்டு வருவதற்கு சிறப்பு நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ள கோயில்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒருசில இடங்களில்

மண்டபம் என்ற பெயராலும், பழுதடைந்த கோயில்கள் என்ற பெயராலும் வருடத்தில் ஒரு நாள் அல்லது இருநாள் திருவிழா என்று எடுத்து, பல ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் பெறுகிறார்கள். அது கணக்கில் காட்டப்படுவதில்லை. அம்மாதிரியான நடவடிக்கைகளை தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, யார் ஏமாற்று வேலை செய்தாலும், அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானால், அதில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, பல கோயில்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்தும், அந்த வருமானத்தைக் கோயிலுக்குக் கொடுக்காமல், சில தனிப்பட்ட நபர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Ex-servicemen in Tamil Nadu

* 210. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any census of Ex-servicemen has been taken in this State; and

(*b*) if so, the details thereof, district wise?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாட்டின் முன்னாள் படைவீரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த தோராயமான, உடனடிக் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு முப்படை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(இ) இப்பணி முடிவடையவில்லை.